# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:46** **தேதி:-22.06.2015**

## டல்ஹௌஸி மத்திய செயற்குழு

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழு 2015, ஜூன் 16 முதல் 18 வரை இமயமலை சாரலில் உள்ள மலை வாசஸ்தலமான டல்ஹௌஸியில் நடத்துவது என நமது மத்திய சங்கம் முடிவெடுத்து. சிறிய மாநிலமான இமாசால பிரதேச மாநிலத் தோழர்கள் அதற்கான சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தது.

**பொது அரங்கம்**:- ஜூன் 16ஆம் தேதி காலை 11 மணிக்கு தேசியக் கொடியினை நமது அகில இந்திய தலைவர் தோழர் பல்பீர்சிங் அவர்களும், நமது சங்கக் கொடியினை பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும் ஏற்றி வைத்தனர். தியாகிகளுக்கு அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்ற பின்னர் மத்திய செயற்குழுவின் பொது நிகழ்ச்சி அகில இந்திய தலைவர் தோழர் பல்பீர் சிங் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மிக எழுச்சியுடன் துவங்கிய அந்த மத்திய செயற்குழுவினை BSNL ஊழியர் சங்கத்தின் புரவலர் தோழர் VAN நம்பூதிரி சிறப்பாக துவக்கி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார். அந்த பொது நிகழ்ச்சியில் CITU சங்கத்தின் இமாசலபிரதேச மாநில உதவி தலைவர் தோழர் அகூர் அவர்களும், இமாசலபிரதேச மாநில செயலாளர் தோழர் சீயால் அவர்களும் சிறப்புரை ஆற்றினார்கள். பின்னர் நமது அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைகள் தொடர்பாகவும், அதன் ஒரு பகுதியான ரயில்வேயில் தனியார் மயம் பற்றியும் விளக்கினார். BSNLன் தற்போதைய நிலைமை, அதில் FORUM மற்றும் நமது சங்கத்தின் தலையீடுகள் தொடர்பாகவும், ஊழியர்களின் கோரிக்கைகள், அதில் JAC மற்றும் நமது சங்கத்தின் தலையீடுகள் மற்றும் போராட்டங்கள் தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தார். இறுதியில் BSNL ஊழியர் சங்கத்தின் துணைப் பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி நன்றி உரை கூறி பொது அரங்கினை முடித்து வைத்தார்.

**தாங்க முடியாத சோகம்**:- உணவு இடைவேளைக்காக ஒத்தி வைக்கப்பட்ட பின் அதில் பங்கேற்ற அனைவரையும் ஒரு மோசமான செய்தி தாக்கியது. அந்த செயற்குழுவிலே கலந்துக் கொள்ள வந்த குஜராத் மாநில செயலாளர் தோழர் A.M.பட்டீல் அவர்கள் மாரடைப்பால் அங்குள்ள ஒரு மருத்துவமனையில் உயிரிழந்தார் என்ற செய்திதான் அது. வந்திருந்த அனைவரும் அந்த மருத்துவமனைக்கு சென்று தோழர் பட்டீலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். அங்கிருந்து அவரது பூத உடலை எடுத்துக் கொண்டு நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு உள்ளிட்ட தோழர்கள் பதான்கோட்டிற்கு கொண்டு சென்றனர். அங்கு பத்தான் கோட் மாவட்ட பொது மேலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும், நமது BSNL ஊழியர் சங்க தோழர்களும் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த குளிரூட்டப்பட்ட அமரர் ஊர்தியையும், நமது சங்கக் கொடி சுற்றப்பட்ட பனிக்கட்டிகள் நிரப்பப்பட்ட பெட்டியையும் தயார் செய்து வைத்திருந்தனர். BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய சங்க நிர்வாகி தோழர் பகுத்ரா உள்ளிட்ட சில தோழர்களுடன் அந்த ஊர்தி தோழர் பட்டீலின் சொந்த ஊரான கோத்ராவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**சுருக்கமாய் ஒரு மத்திய செயற்குழு**:- 17ஆம் தேதி காலை பற்றிய சோகம் களையாமல் மத்திய செயற்குழு மீண்டும் கூடியது. தோழர் பட்டீலின் மறைவிற்கு அஞ்சலி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்த நாள் காலை கோத்ராவில் நடைபெறவுள்ள தோழர் பட்டீலின் இறுதி நிகழ்ச்சிக்காக நமது பொது செயலாளர் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்க வேண்டும் என்பதனால் செயற்குழுவை விரைவாக முடிக்க வேண்டும் என்கின்ற பொது செயலாளரின் வேண்டு கோள் ஏற்கப்பட்டது.

அவர் முன்வைத்த அறிக்கையும், கீழ்கண்ட முடிவுகளும் ஒரு சிறு விவாதத்திற்கு பின் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

**முடிவுகள்:-**

1. அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் அறைகூவல் விட்டுள்ள 2015, செப்டம்பர் 2 பொது வேலை நிறுத்தத்தில் அனைத்து BSNL ஊழியர்களும் ஒட்டு மொத்தமாக பங்கேற்க இந்த மத்திய செயற்குழு அறைகூவி அழைக்கிறது.
2. தீர்க்கப்படாத ஊழியர் பிரச்சனைகளுக்காக JACயுடன் இணைந்து தேவைப்படின், அவசியமான தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுக்க மத்திய சங்கத்திற்கு இந்த மத்திய செயற்குழு வழிகாட்டுகிறது.
3. FORUM அறைகூவல் விட்டுள்ள ஒரு மாத கால இயக்கத்தை வெற்றிகரமாக்கிட அனைத்து மாநில, மாவட்ட சங்கங்களையும் இந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
4. எந்தெந்த மாவட்ட/ மாநில கவுன்சில்கள் கூட்டப்படவில்லையோ, அவற்றையெல்லாம் உடனடியாக கூட்ட வேண்டும் என மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
5. WORKS COMMITTEE கூட்டங்களை முறையான கால அவகாசத்தில் கூட்ட வேண்டும் என அனைத்து மாவட்ட சங்கங்களையும் மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
6. K.G.BOSE MEMORIAL AND EDUCATIONAL TRUST தொழிற்சங்க வகுப்புகளை நடத்த வேண்டும் என இந்த மத்திய செயற்குழு முடிவு செய்கிறது. அந்த வகுப்புகளுக்கான பாடங்கள், மையங்கள் மற்றும் நேரம் ஆகியவற்றை TRUST முடிவு செய்யும்.
7. கிளைகள் வாரியாக தேவைப்படும் 'TELE CURSADER' பத்திரிக்கைகளின் எண்ணிக்கையை உடனடியாக மாவட்ட சங்கங்கள் தெரிவிக்க வேண்டும்.
8. அடுத்த அகில இந்திய மாநாட்டினை நடத்துவதாக தமிழ் மாநில சங்கம் வைத்த வேண்டுகோளை இந்த மத்திய செயற்குழு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

மேலும் கீழ்கண்ட தீர்மானங்களும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன:-

- 2015 செப்டம்பர் 2 அன்று நடைபெற உள்ள பொது வேலை நிறுத்தம் தொடர்பானது.
- தேங்கியுள்ள ஊழியர்களின் முக்கிய பிரச்சனைகள் தொடர்பான ஒரு தீர்மானம்.
- BSNLல் அடுத்த ஊதிய மாற்றம் தொடர்பான ஒரு தீர்மானம்.
- BSNLன் புத்தாக்கத்திற்காக நடைபெற்ற இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் தொடர்பான ஒரு தீர்மானம்.
- FORUM அறைகூவல் விட்டுள்ள 'ஒரு மாத கால இயக்கம்' தொடர்பான தீர்மானம்.
- மோடி அரசாங்கம் கொண்டு வந்துள்ள 'நிலம் கையகப்படுத்தும் மசோதா'விற்கு எதிரான ஒரு தீர்மானம்.

இந்த முடிவுகளும் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பின் மதியம் 12 மணியளவில் செயற்குழு நிறைவு பெற்றது.

அனைவரும் செல்வதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில், BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, புரவலர் தோழர் VAN நம்பூதிரி மற்றும் துணைபொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி ஆகியோர் மத்திய சங்கத்தின் சார்பாக உடனடியாக புறப்பட்டு கோத்ரா சென்றனர். 18.06.2015 அன்று அவர்கள், அங்கு கூடியிருந்த திரளான BSNL ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் தோழர் பட்டீலின் உறவினர்களுடன் மறைந்த தலைவர் தோழர் A.M.பட்டீல் அவர்களின் இறுதி நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

குறுகிய நேரம் நடைபெற்றாலும் நல்ல பல முடிவுகளை எடுத்துள்ள டல்ஹௌசி மத்திய செயற்குழுவின் முடிவுகளை மிக நேர்த்தியாக நிறைவேற்றுவோம்.

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**